**Previous Examination date – 15.12.2014**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 347 of 2012**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : ராஜா** | **Father/Husband's Name : மீனாட்சி சுந்தரம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 19.09.2025.**

**Accused absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் உதவி பேராசிரியராக மற்றும் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.03.2011 ம் தேதி அன்று மதியம் 1.00 மணியளவில் பழனி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது திருமதி.மீனாட்சி வயது 41 க/பெ.முருகசாமி, மானூர் என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் அன்று காலை 11.30 மணிக்கு தனது வீட்டருகில் கம்பியால் தாக்கியதாக கூறி சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

1) நெற்றி பகுதியில் ஒரு சிராய்ப்பு காயம்.

2) வலது புஜத்தில் 2x2 செ.மீ. அளவுள்ள ஒரு வீக்கம்.

அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் என்று சான்று வழங்கினேன். **விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. காயம்பட்ட நபரை யார் சிகிச்சைக்கு அழைத்து வந்தார் என்றால் தங்கவேல் என்பவர் அழைத்து வந்தார். எத்தனை நாட்கள் அவர் சிகிச்சையில் இருந்தார் என்றால் அது Case sheet ல் தான் இருக்கும். மேற்படி நபர் வயலில் தடுமாறி விழும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் தடுமாறி விழும்போது கடினமான

பகுதியில் விழுந்தால் சிராய்ப்பு காயங்கள் ஏற்படலாம். ஒரு நபர் கல்லை கொண்டு எறிந்தால் 2வது காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் இல்லை. கல்லை கொண்டு ஓங்கி தாக்கினால் தான் வாய்ப்புண்டு. சிகிச்சை அளித்த நபருக்கு தலையில் காயம் இல்லை என்றால் நெற்றிப்பகுதியில் காயம் உள்ளது, நெற்றியும் தலையின் ஒரு பகுதி தான்.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.09.19 17:39:47 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date – 15.12.2014**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 347 of 2012**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : பொன்னுசாமி** | **Father/Husband's Name : குப்பமுத்து** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 19.09.2025.**

**Accused absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் பழனி இருப்பு பாதை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.வேம்புராஜ் என்பவரை எனக்கு தெரியும். சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.வேம்புராஜ் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.வேம்புராஜ் அவர்கள் தற்போது உயிருடன் இல்லை. கடந்த 14.03.2011 ம் தேதி மேற்படி வேம்புராஜ் நிலைய பொறுப்பில் இருந்த போது பழனி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மீனாட்சி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து நிலையத்திற்கு 15.03.2011 ம் தேதி அதிகாலை 00.30 மணிகளுக்கு வந்து புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல்நிலைய கு.எண்.66/2011 பிரிவுகள் 341,294(b),324 இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் அச்சு முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் கோப்பை எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 15.03.2011 ம் தேதி காலை 9.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுப்பிரமணி,தண்டபாணி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். **பார்வைமகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் மீனாட்சி, நாகேந்திரன், குமரவேல், தங்கவேல், முருகசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த வேம்புராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 15.03.2011ம் தேதி 14.00 மணிக்கு மானூர் பஸ் நிலையம் அருகில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். 11.06.2012ம் தேதி மருத்துவர் ராஜா என்பவரை விசாரித்து அவர் அளித்த காயச்சான்றை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 341,294(b),324 இ.த.சவின் கீழ் 11.06.2012ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. புகார்தாரரின் மகன் தான் பட்டியல் சாட்சி 2 ராஜேந்திரன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தில் பட்டியல் சாட்சி 2 ராஜேந்திரனுக்கு காயம் எதுவும் ஏற்பட்டதாக புகாரிலும், விசாரணையிலும் இல்லை என்றால் சரிதான். ராஜேந்திரன், தங்கவேல், ராமசாமி ஆகியோர் இந்த வழக்கு சம்பவத்தை தடுத்ததாகவோ, விலக்கிவிட்டதாகவோ புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் இல்லை என்றால் சரியல்ல, அவர்கள் விலக்கிவிட்டுள்ளார்கள். ராஜேந்திரன், தங்கவேல், ராமசாமி ஆகியோர் விலக்கிவிட்டார்கள் என்று எந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடபடவில்லை. புகாரிலும், விசாரணையிலும் மீனாட்சிக்கும், தங்கபழத்திற்கும் தான் பிரச்சனை இருந்தது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான், மற்ற நபர்கள் அங்கு இருந்துள்ளார்கள். இந்த வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. புகார் வாக்குமூலத்தில் மீனாட்சிக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக மட்டும் தான் சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சம்பவ நேரத்தில் மீனாட்சியின் மகன் ராஜேந்திரன் என்பவர் தான் எதிரி தங்கபழத்தின் மீது கல்லை தூக்கி எறிந்தார் என்றாலும் அதில் தங்கபழம் விலகி கொண்டதால் அந்த கல் மீனாட்சி மீது பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு முன்பு புகார்தாருக்கும், எதிரிக்கும் தோட்டம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்று சொல்லியுள்ளார்கள்

**என்றால் சரிதான். அந்த பிரச்சனையை மனத்தில் வைத்து கொண்டு பட்டியல் சாட்சி 2 ஆல் ஏற்பட்ட காயத்தை வைத்து கொண்டு புகார்தாரர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.09.19 17:39:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**